# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - JANUARY 2020

மலர்: 13 இதழ்: 4 ஜனவரி 2020 விலை: ரூ. 10

## கட்டுப்பாடுகளே அமைதி வாழ்க்கைக்கு அடித்தளம்



- ஆணும் பெண்ணும் உறவாட தடைகள் எதற்கு?
- பாலியல் கொடுமைகளில் இருந்து காக்கும் கட்டுப்பாடுகள்
- உங்கள் குழந்தைகள் நாளை உங்களை மதிக்க வேண்டுமா?

# ஒன்றே குலம்! ஒருவனே இறைவன்! யாதும் ஊரே! யாவரும் உறவே!



◆ மனிதர்களே நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். (திருக்குர்ஆன் 49 :13)

◆ மனிதர்களே உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனுக்கே அடிபணியுங்கள் (அவ்வாறு செய்வதனால் மட்டுமே) நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

◆(திருக்குர்ஆன் 2:21.)

## இதுதான் உங்கள் உண்மை உறைவிடம் !

**மக்களை சுரண்டிப் பிழைக்கும் காலனியாதிக்க வாதிகள் உங்களைப் பிரித்தாள வகுத்த எல்லைக் கோடுகளை நம்பி மோசம் போகாதீர்கள் !**

● இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் வகுத்து வழங்கும் வாழ்க்கை நெறியே இஸ்லாம் என்பது. இஸ்லாம் என்ற அரபுச்சொல்லுக்கு அமைதி என்பது பொருளாகும். இதன் இன்னொரு பொருள் கட்டுப்படுதல் அல்லது கீழ்படிதல் என்பதாகும். அதாவது இறைவன் வழங்கும் வழிகாட்டுதலுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தால் இவ்வுலகிலும் அமைதி காண முடியும், மறுமையிலும் அமைதி அதாவது சொர்க்கத்தைப் பெறமுடியும் என்பது இஸ்லாம் முன்வைக்கும் தத்துவமாகும்.

● அனைத்து மனிதகுலமும் ஒரே ஒரு ஆண் – பெண் ஜோடியில் இருந்து உருவானதே என்பதும் மனிதர்கள் அனைவரும் சரி சமமே என்பதும் சகோதரர்களே என்பதும் அவர்களுக்கு இடையே இனம், நிறம், மொழி, நாடு என்ற அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கக் கூடாது என்பதில் இஸ்லாம் உறுதியாக இருக்கிறது. ஒரே மனிதகுலத்தில் ஷைத்தான் இக்காரணங்கள் கூறி பிரிவினைகளும் ஏற்படுத்த முயலும்போது இஸ்லாம் அதற்குக் குறுக்கே நிற்கிறது. இதனால் மக்களைப் பிரித்தாண்டு சுகம் காணும் ஆதிக்கவாதிகள் தங்கள் சுயநலத்திற்காக இஸ்லாத்தை எதிர்க்கிறார்கள்.

மேற்படி காரணங்கள் காரணமாக உண்டாகும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குத்தான் இறைவன் தன் வேதங்களை அருளியுள்ளான். அவ்வாறு இன்றைய காலகட்டத்திற்காக வந்துள்ளதே இறுதிவேதம் திருக்குர்ஆன்.

● (ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர் இறைவன் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான் அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான் (திருக்குர்ஆன் 2:213)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 13 இதழ்: 4 ஜனவரி 2020 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

கட்டுப்பாடுகளே அமைதி வாழ்க்கைக்கு அடித்தளம் -2
ஆணும் பெண்ணும் உறவாட தடைகள் எதற்கு? -6
மறுமை நாள் எப்போது வரும்? -8
பாலியல் கொடுமைகளில் இருந்து காக்கும் கட்டுப்பாடுகள் -9
நபிகளார் செய்த முன்னறிவிப்பு -12
உங்கள் குழந்தைகள் நாளை உங்களை
மதிக்க வேண்டுமா? -13
மண்ணறையில் இருந்து எழும் ஓசை -16
இறையச்சம் நிகழ்த்தும் விந்தைகள் இவை! -17
விபச்சாரம் செய்வோருக்கு மறுமையில் என்ன தண்டனை? -19
இறைமார்க்கத்தின் வளர்ச்சியை முறியடிக்க இயலுமா? -20
நாட்டுப்பற்று - நாடு - தேசத்துரோகம் -23

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **09845373775**

Published from:

**House of Peace,**
PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**
**www.quranmalar.com www.waytoparadise.in**

# கட்டுப்பாடுகளே அமைதி வாழ்க்கைக்கு அடித்தளம்



ஒரு வெள்ளைக் காகிதத்தில் கடிதம் அல்லது கட்டுரை எழுத முற்படுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதலில் கடிதத்தின் எல்லைகளை வரையறுக்க கீழும் பக்கவாட்டிலும் மார்ஜின் போட்டு ஒழுங்குபடுத்துவோம்.

எழுதத் துவங்கும்போது கடித வரிகள் ஒன்றன்கீழ் ஒன்று சீராக இருக்க ரூல் போடுகிறோம். எழுத நினைப்பதை வாக்கியங்களாகப் பிரிக்கிறோம். வார்த்தைகளுக் கிடையே ஒரே மாதிரியான ஸ்பேஸ் விட்டு வரிகளை எழுதுகிறோம். ஒரு கட்டுரை எழுத நினைத்தால், முன்னுரை, முக்கிய உரை, முடிவுரை என தரம் பிரித்து பத்திகள் பிரித்து எழுதுகிறோம். இவ்வாறு வரம்புகளும் வரையறைகளும் விதிமுறைகளும் பேணுவது எதற்காக? அப்போதுதான் நாம் எழுதுவது ஒரு அர்த்தமுள்ள கட்டுரையாகவோ அல்லது கவிதையாகவோ அல்லது ஒரு காவியமாகவோ ஆகும். பிறரால் படிக்கவும் இரசிக்கவும் முடியும். மாறாக ஒரு வெள்ளைத் தாளை எடுத்து மேற்கண்ட வரையறைகள் எதுவுமே பேணாமல் மனம்போன போக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதப்படுபவை எழுத்துக்களே ஆனாலும் அதை கிறுக்கல் என்றும் எழுதியவரை கிறுக்கன் என்றும்தான் மக்கள் அழைப்பார்கள்!

### வீடு கட்டினாலும்..

அதேபோல நீங்கள் ஒரு காலி மைதானத்தில் வீட்டை கட்ட நினைத்தாலும் முதலில் என்ன செய்வீர்கள்?



மைதானத்தில் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து வீட்டிற்கான எல்லை வகுப்பீர்கள். வரைபடம் வரைந்து வீடு கட்டுவதற்கு தேவையானவற்றை சேகரிப்பீர்கள். தொடர்ந்து தரையில் அஸ்திவாரம் போட கோடு போடுதல், குழி வெட்டுதல், வரையறுக்கப்பட்ட அளவையில் கலவை தயாரித்தல், அஸ்திவாரக் குழியில் கலவை போட்டு அஸ்திவார கற்களை குறிப்பிட்ட இடைவெளி விட்டு அடுக்குதல், கலவை போடுதல், அடுத்த வரிசை கற்களை அடுக்குதல் எனத் தொடங்கி இறுதியில் கூரை போட்டு முடிக்கும் வரை ஒவ்வொரு கட்டத்திலும் எல்லைகளையும் வரையறைகளையும் ஏவல் - விலக்கல்களையும் (do’s and don’ts) ஒழுங்கையும் (order) பின்பற்றியே வீட்டைக் கட்டி முடிக்கிறீர்கள்.

இனி, மேற்கண்ட எந்த எல்லைகளையும் வரையறைகளும் ஒழுங்கையும் எல்லாம் புறக்கணித்து ‘என் வீடு இது, என் விருப்பம் எனது உரிமை’ என்று கூறிக் கொண்டு மனம்போன போக்கில் நடந்து கொண்டால் என்ன நடக்கும்? மைதானத்தில் அங்கொரு குழி இங்கொரு குழி அங்கொரு கல் இங்கொரு கல் என ஒரு குப்பை மேடுதான் உருவாகி இருக்குமே தவிர குடியிருக்க ஒரு வீடு அங்கு அமையாது என்பதை அறிவோம்.

## எல்லைகளும் கட்டுப்பாடுகளும்



இவ்வாறு நீங்கள் உணவு சமைப்பதாக இருந்தாலும், ஆடை தைப்பதாக இருந்தாலும், ஏதேனும் உபயோகமுள்ள ஒரு பொருளை தயாரிப்பதாக இருந்தாலும் அங்கெல்லாம் எல்லைகளையும் வரையறைகளையும் ஏவல் – விலக்கல்களையும் ஒழுங்கையும் பின்பற்றினால்தான் அந்த முயற்சி பயனளிப்பதாக இருக்கும் என்பது திண்ணம்! மாறாக தான்தோன்றித்தனம் பயனுள்ள எதையுமே விளைவிக்காது என்பதும் தெளிவு! ஆக, எல்லைகளும் கட்டுப்பாடும் ஒழுங்கும்தான் ஆக்கபூர்வமான எதையும் உருவாக்கும்.

இவ்வாறு மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் எல்லைகளும் கட்டுப்பாடும்தான் அவற்றை பயனுள்ளதாக ஆக்குகின்றன.

அதேபோல அவ்வாறு நீங்கள் தயாரித்த உணவானாலும் ஆடையானாலும் வீடானாலும் அவற்றை பயன்படுத்துவதற்கும் விதிமுறைகள் உள்ளன. உதாரணமாக, மேலாடையைக் கீழாடையாக பயன்படுத்தவோ, சமைத்த உணவை சுவற்றில் பூசவோ, மனிதர்களுக்காகக் கட்டிய வீட்டை மாட்டுத் தொழுவமாக பயன்படுத்தவோ மாட்டோம். ஆக, பொருட்களின் தயாரிப்பு விஷயத்திலும் சரி, பயன்பாட்டு விஷயத்திலும் சரி, நாம் யாருமே தான்தோன்றித்தனமாக செயல் படுவதில்லை. காரணம் அதன் தீய விளைவுகளை நன்றாக

அறிவோம்.

அப்படியானால் உலகத்திலேயே மாபெரும் தயாரிப்பான மனித உடலைப் பெற்றுக்கொண்டிருக்கும் நாம் அதன் பயன்பாட்டு விஷயத்தில் தான்தோன்றித் தனமாக செயல்பட முடியுமா?



கண்டிப்பாக, இந்த மனித உடலின் பயன்பாடு ஆக்கபூர்வமாக அமைய வேண்டுமானால் மன இச்சைக்கு அடிபணிந்து செயலாற்றுவதை விட இந்த உடலை வடிவமைத்து உருவாக்கியதோடு நில்லாமல் அதனை இடைவிடாது பரிபாலித்தும் வருபவன் எவனோ அவனது வழிகாட்டுதல்படி- அதாவது அவன் கற்பிக்கும் எல்லைகளையும் ஏவல்- விலக்கல்களையும் மதித்து - செயல்படுவதுதானே முறை?

**இதுதான் இஸ்லாம்**

அந்த இறைவன் நமக்கு கற்பிக்கும் ஏவல் – விலக்கல்களைப் பேணி அவனது வழிகாட்டுதல் படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே இஸ்லாம் என்று அறியப்படுகிறது. இஸ்லாம் என்ற வார்த்தையின் ஒரு பொருள் அமைதி என்பதாகும், அதன் இன்னொரு பொருள் இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து வாழ்தல் என்பதாகும். அதாவது கீழ்படிதல் (discipline) மூலம் பெறப்படும் அமைதியின் பெயரே இஸ்லாம் என்பதாகும்.

**உலகம் என்ற பரீட்சைக் கூடம்**

இப்போது புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி ஒப்புகொண்டாலும் சரி ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி, நீங்கள் வாழும் வாழ்க்கையைப் பற்றிய நிதர்சனமான உண்மை இதுதான். அதாவது இவ்வுலக வாழ்க்கையை ஒரு பரீட்சையாக அமைத்துள்ள இறைவன் இந்த கீழ்ப்படிதலைத்தான் நம்மிடம் பரீட்சிக்கிறான். அதாவது யாராவது இறைவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால் -அதாவது இறைவன் கற்பிக்கும் எல்லைகளையும் ஏவல் - விலக்கல்களையும் பேணி அதன்படி வாழ்ந்தால் - அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் ஒழுங்கும் நல்லொழுக்கமும் கைகூடுகிறது. அதன்மூலம் அவர்கள் அமைதியான வாழ்க்கை வாழ முடிகிறது

மேலும் மறுமை வாழ்க்கையில் அதற்குப் பரிசாக நிரந்தரமான சொர்க்கத்தையும் அடைகிறார்கள்.

மாறாக யாரெல்லாம் இந்த உண்மையைப் புறக்கணித்து - அதாவது படைத்தவன் கற்பிக்கும் ஏவல்-விலக்கல்களை அலட்சியம் செய்து - அவனுக்குக் கீழ்ப்படியாமல் தான்தோன்றித்தனமாக இந்த வாழ்க்கையை வாழ்கிறார்களோ அவர்களுக்கு இம்மை வாழ்க்கையில் ஒழுக்கமும் ஒழுங்கும் உரிய முறையில் கைகூடுவதில்லை. தனி நபர் வாழ்க்கையும்

குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் குழப்பங்கள் நிறைந்ததாக அமைகிறது. படைத்தவனை மதிக்காமல் அவன் விதித்த வரம்புகளை மீறிய குற்றத்திற்கு தண்டனையாக மறுமையில் நரகத்தை அடைகிறார்கள்.

இறைவன் தனது இறுதிவேதத்தில் தெளிவாக அறிவிக்கிறான்:

● **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக்கூடியதாகவே இருக்கிறது, தீமையை (துன்பங்களை)க் கொண்டும், நன்மையை (இன்பங்களை)க் கொண்டும் பரீட்சிப்பதற்காக உங்களை நாம் சோதிக்கிறோம், மேலும் நீங்கள் நம்மிடமே திருப்பப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 21:35)**

● **திண்ணமாக, நாம் இப்பூமியின் மீதுள்ள அனைத்தையும் அதற்கு அலங்காரமாய் ஆக்கியுள்ளோம், இவர்களில் மிகவும் சிறந்த செயலைச் செய்பவர் யார் என்று இவர்களை சோதிப்பதற்காக! (திருக்குர்ஆன் 18:7)**

## கீழ்படிந்த வாழ்க்கை மட்டுமே ஏற்புடையது

இறைவன் ஏற்படுத்தியுள்ள இந்த வாழ்க்கை என்ற பரீட்சையில் மனிதர்கள் சுயமாக உருவாக்கிய வாழ்க்கை நெறிகளும், முன்னோர் வகுத்த நெறிகளும், நாத்திகர்கள் உருவாக்கிய வாழ்க்கை நெறிகளும் தான்தோன்றித்தனமான வாழ்க்கை முறைகளும் எல்லாமே தோல்வியை சந்திக்கும். இறைவன் அவர்களைப் பார்த்து கேட்பதைப் பாருங்கள்:

● **இறைவனின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப் படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன் மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும்.(திருக்குர்ஆன் 3:83)**

இவ்வுலகையும் அவர்களையும் படைத்தவன் பக்குவமான வாழ்க்கை நெறியை வழங்கியிருக்க அதைப் புறக்கணித்து உருவாக்கப்பட்டவை அவனுக்கு ஏற்புடையதல்ல என்பதை திட்டவட்டமாக அறிவிக்கிறான்:

● **திண்ணமாக, இஸ்லாம் மட்டுமே இறைவனிடம் (ஒப்புக் கொள்ளப்பட்ட) வாழ்க்கை நெறி ஆகும். (திருக்குர்ஆன் 3:19)**

அவ்வாறு வாழ்ந்து செல்பவர்களின் மறுமை நிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் இறைவன் இன்றே எச்சரிக்கிறான்:

● **இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார். (திருக்குர்ஆன் 3:85)**

# கட்டிடம் போல அரண்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் இறைநம்பிக்கையாளர் மற்றொரு இறை நம்பிக்கையாளருக்கு கட்டிடத்தைப் போன்றவர். அதன் ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு உறுதுணையாக இருக்கிறது பிறகு நபி (ஸல்)அவர்கள் உதாரணத்திற்கு தங்களுடைய கை விரல்களைக் கோர்த்துக் காட்டினார்கள்.

(அறிவிப்பாளர் : அபு மூஸா அஷ்அரி (ரலி), நூல்: புஹாரி, முஸ்லிம்)

# ஆணும் பெண்ணும் உறவாட தடைகள் எதற்கு?

இன்று ஆண்களும் பெண்களும் - குறிப்பாக இளைஞர்கள் - சுதந்திரம், விடுதலை, பெண் விடுதலை மற்றும் பாலின சமத்துவம் போன்ற பிரச்சாரங்களால் கவரப்படுகிறார்கள். ஆடைக்குறைப்பே பெண் விடுதலைக்கும் முற்போக்குக்கும் அளவுகோலாக பார்க்கப்படும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'ஆணும் பெண்ணும் காதலால் காமத்தால் ஈர்க்கப் படுகிறார்கள். அவர்களை அவர்கள் போக்கிலேயே விட்டுவிடலாமே! கட்டுப் பாடுகள் எதற்கு?' என்று சிந்திப்போர் அதிகரித்து வருகிறார்கள்.



கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் - அதாவது மனம்போன போக்கும் தான்தோன்றித்தனமும் - எந்த ஒன்றையும் பாழ்படுத்தவே செய்யும் என்பது திண்ணம். அது ஒரு விளையாட்டாக இருந்தாலும் சரியே. உதாரணமாக கால்பந்தாட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள் . வரையறுக்கப்பட்ட ஒரு விளையாட்டு எல்லையும் அதன் விதிகளும் இருந்தால்தான் அது ஒரு அர்த்தமுள்ள விளையாட்டாக அமையும். சற்று கற்பனை செய்து பாருங்கள், விளையாட்டுத் தளத்திற்கான எல்லையும் நிர்ணயிக்கப் படவில்லை, அதற்கான விதிகளும் வரையறுக்கப்படவில்லை, ஆட்டக்காரர்கள் அவரவர் நினைத்தமாதிரி ஆடலாம் என்ற நிலை இருந்தால் கால்பந்து விளையாட்டை ஆடத்தான் முடியுமா? இல்லை, இரசிக்கத்தான் முடியுமா?

## கட்டுப்பாடுகளே மகிழ்ச்சிக்கு அடிப்படை

இவ்வாறிருக்க, வாழ்கையின் மிக முக்கியமான விடயங்களில் ஒழுங்கையும் வரையறைகளையும் கட்டுப்பாட்டையும் பேணாமல் இருக்க முடியுமா? அந்த ஒழுங்கைப் பேணுவதற்கான வழிகாட்டுதல்தான் இஸ்லாம் என்ற இறை தந்த வாழ்வியல் கொள்கை. மனித வாழ்வின் அனைத்து துறைகளிலும் பேணவேண்டிய கட்டுப்பாடுகளை இஸ்லாம் கற்றுத் தருவதை நீங்கள் காணலாம். அந்த வகையில் இஸ்லாம் வாழ்க்கையில் பல விஷயங்களை தடை செய்கிறது. இந்த தடைகள்தான் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குகின்றன என்பதை ஆராய்வோர் அறியலாம்.





உண்மையில் இறைவன் இஸ்லாம் என்ற தன் வாழ்க்கைத் திட்டத்தின் மூலம் வாழ்க்கையின் மகிழ்ச்சியூட்டும் காரியங்களை அனுமதித்து மகிழ்ச்சியைக் கெடுக்கும் காரியங்களை தடை செய்கிறான். உதாரணமாக பொருளீட்டுவது என்பது

வாழ்க்கையின் அத்தியாவசியமான பாகமாகும். நேர்மையான வியாபாரம் என்பது அதன் ஆரோக்கியமான வடிவமாகும். வட்டி என்பது அதனைக் களங்கப்படுத்தும் கறையாகும். அடுத்தவரின் இரத்தத்தை குடித்து கொழுப்பது வட்டி. இஸ்லாம் வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடை செய்துள்ளது.

## ஆண் - பெண் உறவுகளை ஆரோக்கியமாக்கும் கட்டுப்பாடுகள்

பாலியல் மற்றும் காதலின் ஆரோக்கியமான வடிவமே திருமணம் என்பது. விபச்சாரமும் தகாத பாலுறவுத் தொடர்புகளும் அதன் களங்கம் நிறைந்த வடிவமாகும். இவற்றுக்குத் தடை விதித்து திருமணம் மூலம் பாலியல் மற்றும் காதல் தேவைகளை நிறைவேற்றச் சொல்கிறது இஸ்லாம்.

ஆண்-பெண் ஒருவரோடொருவர் பழகுவதற்கும் உறவுகொள்வதற்கும் உடை உடுப்பதற்கும் அவர்களுக்குக் கட்டுப்பாடற்ற முழு சுதந்திரம் வழங்கப்பட்டால் அங்கு என்ன நடக்கும் என்பதை சிந்தித்துப்பாருங்கள். வேட்டைக்காரனாக விளங்கும் ஆண் அங்கு தன் நாட்டத்தைத் தீர்த்துக்கொள்ளவும் நழுவிச் செல்லவுமே முயலுவான். எனவே அந்த சுதந்திரத்தை வரம்பிட்டு கட்டுப்படுத்தியே ஆகவேண்டும். அப்போதுதான் அந்த சுதந்திரம் தனிநபருக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வண்ணம் அமையும். அதைத்தான் இஸ்லாம் திருமணம் என்ற புனித ஒப்பந்தத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள அனுமதித்து, அதற்கப்பாற்பட்ட அனைத்து விதமான பாலியல் அத்துமீறல்களையும் தடை செய்கிறது. மட்டுமல்ல அப்படிப்பட்ட அத்துமீறல்களுக்கு இட்டுச்செல்லும் வழிகளையும் முன்னெச்சரிக்கையோடு தடை செய்கிறது.

- **மேலும், விபச்சாரத்தின் அருகில் கூட நெருங்காதீர்கள்! திண்ணமாக, அது மானங்கெட்ட செயலாகவும், மிகத் தீய வழியாகவும் இருக்கிறது. (திருக்குர்ஆன் 17:32)**

## வரம்பில்லா சுதந்திரத்தின் விளைவுகள்:

ஆணம் பெண்ணும் வரம்புகளின்றி கலந்து பழகலாம் என்று கூறப்படும் “சுதந்திரமானது“ ஆணுக்கு வழங்கப்படும் மோசடி செய்வதற்கான லைசென்ஸ் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆண் - பெண் உடற்கூறு மற்றும் இயற்கை அமைப்பு பின்னணிகளை கருத்தில் கொள்ளாமல் வழங்கப்படும் இந்த சுதந்திரமானது முற்றிலும் இயற்கைக்கு எதிரானது. மீளமுடியாத விபரீதங்களுக்கு இட்டுச் செல்வது.

**மாறாக பாலியல் உறவு மூலம் உண்டாகும் விளைவுகளுக்கு ஆணையும் பெண்ணையும் பொறுப்பேற்கச் செய்யும் ஒப்பந்தமே திருமணம் என்பது.**



அப்படிப்பட்ட ஒப்பந்தம் ஏதும் செய்யாமல் ஆணும் பெண்ணும் மனோ இச்சைக்கு

உட்பட்டு உடலுறவில் ஈடுபடுவது அந்த இருவரையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் எந்த நேரத்திலும் விபரீதங்களுக்கு உள்ளாக்கி விடும் என்பதை நாம் நன்கறிவோம். சம்பந்தப்பட்ட ஆணும் பெண்ணும் சேர்ந்து அனுபவித்த உடலுறவு இன்பத்தின் விளைவுகளை இறுதியில் பெண் தன்னந்தனியாளாக சுமக்கவேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகிறாள். நிலைமை ஆணுக்கு எதிராகவும் மாற வாய்ப்புண்டு. இதன் மூலம் அவன் அந்தப் பெண்ணால் பிளாக்மெயில் செய்யப்படவும் அது வழிவகுக்கும். இதற்குக் காரணம் ஒப்பந்தம் செய்யாமல் உண்டான உடலுறவே!

பாலியல் விபரீதங்கள் நேராமல் இருக்க பார்வைகளைக் கட்டுபடுத்தி கற்பைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று முதலில் ஆண்களை நோக்கித்தான் திருக்குர்ஆனில் கட்டளையிடுகிறான் இறைவன். பிறகுதான் பெண்களுக்கான கற்பைப் பேணும் கட்டளை என்பதை கவனியுங்கள்:

**● (நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும். இதுவே, அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும். அவர்கள் செய்யும் அனைத்தையும் திண்ணமாக, அல்லாஹ் நன்கு தெரிந்தவனாக இருக்கின்றான். மேலும் (நபியே!) இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக் கட்டும் தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும் அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முன்றானையைப் போட்டுக் கொள்ளட்டும்....**

(திருக்குர்ஆன் 24:30,31)

# மறுமை நாள் எப்போது வரும்?

**● அதன் ஞானம் இறைவனிடமே உள்ளது.**

**அந்த நேரம் எப்போது வரும் என்று (முஹம்மதே!) உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். இது பற்றிய ஞானம் என் இறைவனிடமே உள்ளது. அதற்குரிய நேரத்தில் அவனைத் தவிர யாரும் அதை வெளிப் படுத்த முடியாது. வானங்களிலும் பூமியிலும் அது மகத்தானதாக அமையும். அது உங்களிடம் திடீரென்று தான் வரும் என்று கூறுவீராக! இது பற்றி நீர் நன்கு பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே உள்ளது என்று கூறுவீராக! எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிந்து கொள்வதில்லை.**

(திருக்குர்ஆன் 7:187)

**● எச்சரிப்பது மட்டுமே தூதர் பணி.**

**நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அந்த எச்சரிக்கை எப்போது எனக்கேட்கின்றனர். அந்த அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. நான் தெளிவாக எச்சரிப்பவன் மட்டுமே எனக் கூறுவீராக!**

(திருக்குர்ஆன் 67:25.26)

# பாலியல் கொடுமைகளில் இருந்து காக்கும் கட்டுப்பாடுகள்

குடும்பங்களே சமூக அமைப்பின் ஊற்றுக்கண்கள். அதில் பெண்கள்தான் மனித இனத்தின் விளைநிலங்கள் என்பதை நாம் நன்கறிவோம். அதில் உருவாகும் குழந்தைகள் எவ்வளவு நல்லொழுக்கத்தோடும் கட்டுப்பட்டோடும் வளர்கிறார்களோ அதைப் பொறுத்தே சமூகமும் ஒழுக்கமுள்ளதாக அமையும். சமூக வாழ்விலும் அமைதி நிலவும்.

அவ்வாறு ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காகத்தான் கீழ்காணும் வரம்புகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கிறான் இறைவன். இன்று நாட்டில் பரவலாக நடந்து கொண்டு இருக்கும் பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாக்க இவை ஒவ்வொன்றும் இன்றியமையாதவை என்பதை நீங்கள் உணரலாம்.

**1. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆடைக் கட்டுப்பாடு,**

- ஆண்களுக்கு தொப்புள் முதல் முழங்கால் வரையிலான உடலின் பாகங்கள் மறைக்கப்பட வேண்டியவையாகும்.

- பெண்களைப் பொறுத்தவரை முகம் மற்றும் முன்கை தவிர மற்ற எல்லா பகுதிகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.

- உடலின் பாகங்களை வெளிப்படுத்தும் விதமான மெல்லிய ஆடைகளும் இறுக்கமான ஆடைகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தடை செய்யப்பட்டு உள்ளன.

*(ஆதாரம்: திருக்குர்ஆன் 24:31, 33:59 மற்றும் நபிமொழிகள் )*

**2. பாலியல் வக்கிரத்தைத் தூண்டக்கூடிய செயல்களின் பக்கம் நெருங்கத் தடை**

- **மேலும், விபச்சாரத்தின் அருகில் கூட நெருங்காதீர்கள்! திண்ணமாக, அது மானங்கெட்ட செயலாகவும், மிகத் தீய வழியாகவும் இருக்கிறது. (திருக்குர்ஆன் 17:32)**

**3. ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பொழுக்கம், பார்வைக் கட்டுப்பாடு**

- **(நபியே!) இறைநம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தங்கள் பார்வைகளைப் பேணிக் கொள்ளும்படியும் தங்களுடைய வெட்கத்தலங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படியும் நீர் கூறும். இதுவே, அவர்களுக்கு மிகத் தூய்மையான வழிமுறையாகும். அவர்கள் செய்யும் அனைத்தையும் திண்ணமாக, அல்லாஹ் நன்கு தெரிந்தவனாக இருக்கின்றான். மேலும் (நபியே!) இறைநம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறும்: அவர்கள் தங்களுடைய பார்வைகளைப் பேணிக் கொள்ளட்டும். தங்களுடைய வெட்கத் தலங்களைப் பாதுகாக் கட்டும் தங்களுடைய அழகை வெளியில் காட்டாதிருக்கட்டும் அதிலிருந்து தாமாக வெளியே தெரிகின்றவற்றைத் தவிர! மேலும், தங்களுடைய மார்புகள் மீது தங்கள் முன்றானையைப் போட்டுக் கொள்ளட்டும்.... (திருக்குர்ஆன் 24:30,31).**

**4. பத்து வயதுக்கு மேல் ஆண்குழந்தைகளையும் பெண்குழந்தைகளையும் பிரித்துப் படுக்க வைத்தல்**

● *நபி (ஸல்) அவர்கள் சொன்னர்கள்:*

*"உங்கள் குழந்தைகளுக்கு ஏழு வயதாகும்போது தொழச்சொல்லி ஏவுங்கள். பத்து வயதாகும்போது தொழவில்லையெனில் (காயம் ஏற்படாதவாறு) அடியுங்கள்! மேலும் படுக்கையிலிருந்து பிரித்து (படுக்க) வையுங்கள்." (அபூதாவுத்)*

### 5. இரு பாலர்க்கும் கட்டாயக் கல்வி

● *"கல்வி கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் கட்டாயக் கடமையாகும்" - நபிமொழி (புகாரி)*

### 6. பெண்கள் நெருங்கிய ஆண் துணையின்றி நீண்ட பயணங்கள் மேற்கொள்ளத் தடை

● *எந்த ஒரு பெண்ணும் மஹ்ரம் (நெருங்கிய ஆண் உறவினர்) துணை இல்லாமல் ஒரு பரீத் அதாவது 12 மைல் தூரத்துக்குப் பயணம் செய்யக் கூடாது என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா நூல்கள்: பைஹகீ, அபூதாவூத்)*

### 7. அந்நிய ஆண்களும் பெண்களும் சரளமாகப் பழகுவதற்குத் தடை

● **மேலும், (இறை விசுவாசினிகளான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம் மேலும், இறைவிசுவாசிகளே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் பிழை பொறுக்கத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். (திருக்குர்ஆன் 24:30,31).**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)*

### 8. அந்நிய ஆண்களோடு பெண்கள் குழைந்து பேசத் தடை

● **நபியின் மனைவிகளே! நீங்கள் பெண்களில் மற்றப் பெண்களைப் போலல்ல நீங்கள் இறையச்சத்தோடு இருக்க விரும்பினால், (அந்நியருடன் நடத்தும்) பேச்சில் நளினம் காட்டாதீர்கள். ஏனெனில் எவன் உள்ளத்தில் நோய் (தவறான நோக்கம்) இருக்கின்றதோ, அ(த்தகைய)வன் ஆசை கொள்வான் இன்னும் நீங்கள் நல்ல பேச்சே பேசுங்கள். (திருக்குர்ஆன் 33:32)**

### 9. வயது வந்த அந்நிய ஆணும் பெண்ணும் தனித்திருக்கத் தடை

● “ஒரு பெண்ணுடன் எந்த (அந்நிய) ஆடவனும் தனிமையில் இருக்க வேண்டாம். (மண முடிக்கத் தகாத) நெருங்கிய ஆண் உறவினருடன் அவள் இருக்கும் போதே தவிர” என்று நபிகள் நாயகம் ஸல் அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம்)

● உங்களில் எவரும் (அந்நியப்) பெண்ணுடன் தனித்து இருக்க வேண்டாம்! ஏனெனில் ஷைத்தான் உங்களில் இருவரில் மூன்றாம் நபராக இருப்பான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(நூல்: அஹ்மத் 109)*

## 10. வயது வந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் விரைவாகத் திருமணம்

**● இன்னும், உங்களில் வாழ்க்கைத் துணை இல்லா (ஆடவர், பெண்டி)ருக்கும், அவ்வாறே (வாழ்க்கைத் துணையில்லா) நற்குணம் கொண்ட உங்கள் (ஆண், பெண்) அடிமைகளுக்கும் விவாகம் செய்து வையுங்கள் அவர்கள் ஏழைகளாக இருந்தால், அல்லாஹ் தன் நல்லருளைக் கொண்டு அவர்களைச் சீமான்களாக்கி வைப்பான் மேலும் அல்லாஹ் (கொடையில்) விசாலமானவன். (யாவற்றையும்) நன்கறிந்தவன். (திருக்குர்ஆன் 24:32)**

## 11. மணப்பெண்ணின் சம்மதமின்றி மணமுடிக்கத் தடை

● ’கன்னிப் பெண்ணாயினும். விதவையாயினும் சம்மதம் பெறவேண்டுமென்று நபி(ஸல்) அவர்கள் கூறியபோது, கன்னிப் பெண் (சம்மதம் தெரிவிக்க) வெட்கப்படுவாளே என்று கேட்டேன். அதற்க நபி(ஸல்) அவர்கள், அவளது மௌனமே அவளது சம்மதமாகும்’ என்று கூறினார்கள். அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) ஆதாரம்: புகாரி, முஸ்லிம்.

## 12. வரதட்சணைக்குத் தடை, பெண்ணுக்கு மணக்கொடை கொடுக்க கட்டளை

**● மேலும், (நீங்கள் திருமணம் செய்யும்) பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹர் தொகையை (கடமையெனக் கருதி) மனமுவந்து வழங்கி விடுங்கள். (திருக்குர்ஆன் 4:4)**

## 13. குடும்பத் தலைமையும் பொருளாதார சுமையும் ஆண் மீது கடமை, குடும்ப நிர்வாகம் பெண் மீது கடமை, பொருளாதாரச் சுமை மீது அல்ல.

**● ஆண்கள் பெண்களை நிர்வகிப்போர் ஆவர். இதற்குக் காரணம் அல்லாஹ் அவர்களில் சிலருக்குச் சிலரைவிட உயர்வை அளித்திருக்கின்றான் என்பதும், ஆண்கள் தங்களுடைய செல்வத்திலிருந்து செலவு செய்கிறார்கள் என்பதுமாகும் (திருக்குர்ஆன் 4:34)**

## 14. கற்பொழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு கூறினால் கசையடி

**● எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லி பின்னர், நான்கு சாட்சிகளைக் கொண்டுவரவில்லையோ அவர்களுக்கு எண்பது சாட்டையடிகள் கொடுங்கள். இனி, அவர்கள் கூறும் சாட்சியத்தை என்றைக்கும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். மேலும், அவர்களே தீயவர்கள். (திருக்குர்ஆன் 24:4)**

## 15. விபச்சாரக் குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகள்

**● விபச்சாரம் செய்த பெண், விபச்சாரம் செய்த ஆண் இவர்களில் ஒவ்வொருவருக்கும் நூறு சாட்டையடி கொடுங்கள். மேலும், நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால், அல்லாஹ்வுடைய தீனின் மார்க்கத்தின் விவகாரத்தில் இவர்கள்மீதுள்ள இரக்கம் உங்களை பாதித்துவிடக்கூடாது. மேலும், இவர்களுக்குத் தண்டனை அளிக்கும்போது, இறைநம்பிக்கையாளர்களின் ஒரு குழு அங்கே இருக்க வேண்டும்.**

**(திருக்குர்ஆன் 24:2)**

மேலும் விபச்சாரக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளி திருமணம் முடித்த ஆண் அல்லது திருமணம் முடித்த பெண்ணாக இருந்தால் அவர்களுக்கு பொதுமக்கள் முன் மரண தண்டனை வழங்கவும் இஸ்லாம் பரிந்துரைக்கிறது.

# நபிகளார் செய்த முன்னறிவிப்பு

உலகில் மனிதர்கள் நேர்வழியிலிருந்து பிறழும் போது அவர்களை தூய்மைப்படுத்துவதற்காக இறைவன் தூதர்களை அனுப்புகிறான். அவர்கள் தூதர்தாம் என்பதற்கு அத்தாட்சியாக சில அதிசயங்களை முன்னறிவிப்பு செய்யக் கூடிய ஆற்றல்களையும் வருங்காலத்தில் நடைபெறவிருக்கின்ற சில விஷயங்களை முன்னறிவிப்பு செய்ய கூடிய திறனையும் இறைவன் கொடுத்திருக்கிறான். அவ்வாறு இறுதி நபியாக வந்த நமது நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் அனுமதி கொண்டு சில விஷயங்களை முன்னறிவிப்பு செய்திருக்கின்றார்கள். அவற்றில் சில அவர்களின் வாழ்க்கையிலும் சில இனி வரக்கூடிய காலங்களிலும் நடைபெறவிருக்கின்றன இன்'ா அல்லாஹ்.

நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் தன்னைப் பின்பற்றுவோர் படும் துன்பத்ததை தடுக்க கூட முடியாத பலவீனமான நிலையில் இருந்த போது இஸ்லாத்தை ஏற்க தயங்கிக் கொண்டிருந்த கிறித்தவராயிருந்த அதீ பின் ஹாத்திம் (ரலி) அவர்களை நோக்கி சொன்னார்கள்,

"ஓ! அதீ பின் ஹாத்திமே! ஏன் இஸ்லாத்தை ஏற்கத் தயங்குகிறீர்கள்? இந்த சிறு கூட்டம் உலகில் என்ன ஒரு மிகப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்களா? அறுதியிட்டு சொல்கிறேன், ஒரு காலம் வரும், ஸன்ஆ-விலிருந்து ஹலரமவத் வரை ஒரு பெண் அல்லாஹ்வின் அச்சத்தை தவிர வேறு எந்த அச்சமும் இல்லாமல் தன்னந்தனியாய் செல்வாள். தங்கத்தையும், வெள்ளியையும் தானம் செய்ய புறப்படுவீர்கள். ஆனால் அதை பெற்றுக் கொள்வோர் யாரும் இருக்க மாட்டார்கள். சீசர், கைசரின் சாம்ராஜ்யங்கள் எல்லாம் என்னை பிற்பற்றுவோரை வந்தடையும்".

அதீ பின் ஹாத்திம் (ரலி) அவர்கள் பின்னாளில் சொல்கிறார்கள் "என் வாழ்நாளிலேயே இவை நிறைவேறியதை கண்டுக் கொண்டேன்.

# உங்கள் குழந்தைகள் நாளை உங்களை மதிக்க வேண்டுமா?

பெற்றோர் தமது பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக, அவர்களுக்கு சத்துள்ள உணவைக் கொடுக்கின்றார்கள். அவர்களின் மானத்தைப் பாதுகாத்து அவர்களை அழகு பார்ப்பதற்காக பெருமதிப்பு வாய்ந்த ஆடைகளை வாங்கிக் கொடுக்கின்றார்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை யளிக்கிறார்கள். அவர்களின் உடல் வலிமையை அதிகரிக்கும் நோக்கில் உடற்பயிற்சிக் கருவிகளை வாங்கிக் கொடுக்கின்றார்கள். இவையெல்லாம் தமது பொறுப்பு என்பதை உணர்ந்துள்ள பெற்றோர் சில முக்கியமான விடயங்களை கவனியாது விடுகின்ற காரணத்தால் வளர்ந்து ஆளானதும் அந்தக் குழந்தைகளே இப்பெற்றோருரை சற்றும் மதியாதவர்களாக மாறி விடுகிறார்கள். இந்நிலை நமக்கு ஏற்படாமல் இருக்க நாம் மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகள் ஞானி லுக்மான் அவர்களின் அறிவுரைகளில் காணக் கிடைக்கின்றன.



## லுக்மான் என்ற ஞானி மூலம் அறிவுரை

வரலாற்றில் வாழ்ந்த லுக்மான் என்ற ஒரு இறையச்சம் கொண்ட ஞானி தன் மகனுக்கு செய்த உபதேசத்தை இறைவன் தன் திருமறையில் பெற்றோர்களும் பிள்ளைகளும் பாடம் பெறுவதற்காக வேண்டி எடுத்துரைக்கிறான்:

- **இன்னும் லுக்மான் தம் புதல்வருக்கு: "என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே. நிச்சயமாக இணை வைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்," என்று நல்லுபதேசம் செய்து கூறியதை (நினைவு படுத்துவீராக). (திருக்குர்ஆன்31:13)**

(இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனைக் குறிக்கும் அரபுச்சொல் அல்லாஹ் என்பதாகும். 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது இதன் பொருளாகும்.)

## படைத்தவனை அறிமுகப்படுத்துதல்

படைத்த இறைவனை மட்டுமே வணங்கவேண்டும் என்று மக்களுக்கு போதிப்பது பெற்றோரின் முதலாவதும் முக்கியமானதும் ஆன கடமையாகும். படைப்பினங்களைக் காட்டி அவற்றைப் படைத்தவனை பகுத்தறிவு பூர்வமாக அறிமுகப்படுத்தி அவனோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்துவது ஓர் அறிவார்ந்த செயலாகும். அந்த இறைவன் நமக்கு

வழங்கிவரும் அருட்கொடைகளை நினைவூட்டி அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதி உள்ளவனும் நம் பிரார்த்தனைகளுக்கு பதில் அளிக்கக்கூடியவனும் ஆவான் என்பதை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். குழந்தைகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர இந்த போதனை மிகவும் அவசியமானதாகும். மாறாக முன்னோர்கள் நமக்குக் கற்பித்துவிட்டுச் சென்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக இறைவன் அல்லாதவற்றைக் காட்டி அவற்றைக் கடவுள் என்று கற்பிப்பதும் அவற்றை வணங்க அவர்களை நிர்பந்திப்பதும் பற்பல குழப்பங்களுக்கு வித்திடும் செயலாகும்.

**பாவங்கள் வளர மூலகாரணம்**

சர்வ ஞானமும் சர்வவல்லமையும் கொண்ட இறைவனுக்கு ஒப்பாக அவன் அல்லாத பொருட்களை சித்தரிப்பதால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத இச்செயல் குழந்தைகளை நாளடைவில் நாத்திகத்திற்குக் கொண்டு செல்கிறது. மேலும் அதனால் இறைவனைப் பற்றிய மரியாதை உணர்வு (ளநசழைரளநௌள) அகன்றுபோய் குழந்தைகள் உள்ளங்களில் இறையச்சமே இல்லாமல் போய் விடுகிறது. அதன் காரணமாக பாவங்கள் செய்தால் தட்டிக் கேட்கவோ தண்டிக்கவோ யாருமில்லை என்ற உணர்வு குழந்தைகளை ஆட்கொள்கிறது. தனிநபர் வாழ்விலும் சமூகத்திலும் பாவங்கள் மலிந்து பெருக இதுவே மூலகாரணம் ஆகும்.

ஆளுக்கு ஒன்று ஊருக்கு ஒன்று என்று கடவுளை வெவ்வேறு விதமாக சித்தரித்து அவற்றை வணங்கும்போது மனித குலத்திற்கு உள்ளும் பல பிரிவுகள் உண்டாகி ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளும் நிலையும் இன்ன பிற குழப்பங்களும் உருவாகின்றன. இடைத்தரகர்கள் மூட நம்பிக்கைகளைப் புகுத்தி கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்டவும் இச்செயல் காரணமாகிறது.

இறையச்சம் என்ற பொறுப்புணர்வு ஊட்டப்படாத பிள்ளைகள் இரவுபகல் பாராமல் உழைத்து தங்களை வளர்த்த பெற்றோர்களை நாளை சற்றும் மதிக்காத அவல நிலை உண்டாகிறது. வயதுக்கு வந்ததும் அந்நியர்களோடு ஓடிப்போவதையும், இவர்களது வயதான காலத்தில் இவர்களைப் பராமரிக்காமல் முதியோர் இல்லங்களில் சேர்ப்பதையும், (வட இந்தியாவில்) காசியில் கொண்டுபோய் விட்டு விடுவதையும், கருணைக் கொலை என்ற பெயரில் கொன்று விடுவதையும் அன்றாட நிகழ்வுகளாகக் கண்டு வருகிறோம். இறைவனைப்பற்றியும் மறுமையைப் பற்றியும் முறைப்படி இவர்களை கற்பிக்காமல் வளர்த்ததே இவற்றுக்கெல்லாம் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

**பெற்றோருக்கு நன்றிக்கடன்**

இறைவனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு மனிதனும் பேணவேண்டிய முக்கிய கடமை தன் பெற்றோருக்கு நன்றி செலுத்துவதாகும். அவர்களுக்குக் கீழ்படிதலும் அவர்களின் நலன் பேணுவதும் பிள்ளைகளின் பொறுப்பாகும்.

● **நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி உபதேசம் செய்தோம் அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள் இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது." (திருக்குர்ஆன் 31:14)**

*ஆனால் அதே நேரத்தில் அவர்கள் இறைவன் அல்லாத பொருட்களை வணங்கும் செயலை அவர்களுக்குக் கட்டுப்படக் கூடாது என்பது இறைவனின் கட்டளையாகும்.*

*இறுதியாக பெற்றோராயினும் சரி பிள்ளைகள் ஆயினும் சரி இந்தத் தற்காலிக உலக வாழ்வு எனும் பரீட்சையை முடித்துக்கொண்டு இறுதித்தீர்ப்புக்காக அவனிடமே திரும்ப வேண்டியுள்ளது என்பதை நினைவூட்டுகிறான் இறைவன்:*

● **ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லையோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் வழிபட வேண்டாம் ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக் கொள் (யாவற்றிலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக - பின்னர் உங்கள் (அனைவருடைய) மீளுதலும் என்னிடமேயாகும். நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை (அப்போது) நான் உங்களுக்கு அறிவிப்பேன். (திருக்குர்ஆன் 31:15)**

## வினைகள் விசாரிக்கப்படும் என்ற போதனை

*ஞானி லுக்மானின் போதனையில் அடுத்து நாம் இங்கு செய்யகூடிய அனைத்து செயல்களும் இறைவனிடம் பதிவாகின்றன - அவை அனைத்தும் விசாரணைக்கு வரும் என்ற அறிவுரை முக்கயமானது.*

● **(லு:.க்மான் தம் புதல்வரிடம்) என் அருமை மகனே! (நன்மையோ, தீமையோ) அது ஒரு கடுகின் வித்து அளவே எடையுள்ளது ஆயினும் அது கற்பாறைக்குள் இருந்தாலும் அல்லது வானங்களில் இருந்தாலும், அல்லது பூமிக்குள்ளே இருந்தாலும் அல்லாஹ் அதையும் (வெளியே) கொண்டு வருவான் நிச்சயமாக அல்லாஹ் நுண்ணறிவு மிக்கவன் (ஒவ்வொன்றின் அந்தரங்கத்தையும்) நன்கறிபவன். (திருக்குர்ஆன் 31:16)**

*அனைத்தும் இறைவனால் விசாரிக்கப்பட உள்ளது என்ற உணர்வு பிள்ளைகளை பொறுப்புணர்வு உள்ள்ளவர்களாக மாற்றும். தனிமையில் கூரிருட்டில் செய்யப்படும் பாவங்களும் அவற்றின் விளைவுகளும் விசாரிக்கப்படும் என்ற உணர்வு பெற்றால் பிள்ளைகள் செல்போன், இணையம் போன்றவற்றை பொறுப்புணர்வோடு கையாள்வார்கள்.*

**தொழுகை நிலைநாட்டுதல்**

**● "என் அருமை மகனே! நீ தொழுகையை நிலை நாட்டுவாயாக் நன்மையை ஏவி, தீமையை விட்டும் (மனிதர்களை) விலக்குவாயாக் உனக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வாயாக் நிச்சயமாக இதுவே வீரமுள்ள செயல்களில் உள்ளதாகும். (திருக்குர்ஆன் 31:17)**

வேளாவேளை இறைவனின் அருகாமையை, அவனது அருளை, கருணையை நினைவு கூரவும் அவனுக்கு நன்றி செலுத்தவும் நிறைவேற்றப்படும் தொழுகையானது ஏராளமான உளவியல் நன்மைகளையும் உடல் சார்ந்த நன்மைகளையும் பெற்றுத்தரும் ஒன்றாகும். அகிலங்களைப் படைத்த இறைவன் நம்மோடு துணை இருக்கிறான் என்ற தன்னம்பிக்கை நமக்கு இந்த பூமியில் நன்மையான காரியங்களை ஏவுவதற்கும் தீமையான காரியங்களை தடுப்பதற்கும் அலாதியான தைரியத்தை வளர்க்கிறது.

# மண்ணறையில் இருந்து எழும் ஓசை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒரு அடியான் சமாதியில் அடக்கம் செய்யப்பட்டு அவனுடைய தோழர்கள் திரும்பிச் செல்லும்போது, அவன் அவர்களின் செருப்பின் ஓசையைச் செவியேற்பான். அப்போது இரண்டு வானவர்கள் அவனிடம் வந்து அவனை எழுப்பி உட்கார வைத்து, 'இந்த மனிதரைப் பற்றி என்ன கருதிக் கொண்டிருந்தாய்?' என்று முஹம்மத் (ஸல்) குறித்துக் கேட்பர். அவன் இறைநம்பிக்கையாளனாக இருந்தால் 'இவர் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என நான் சாட்சி கூறுகிறேன்' எனக் கூறுவான். அவனிடம் (நீ கெட்டவனாய் இருந்திருந்தால் உனக்குக் கிடைக்கவிருந்த) நரகத்திலுள்ள உன்னுடைய இருப்பிடத்தைப் பார். (நீ நல்லவனாக இருப்பதால்) அல்லாஹ் இதை மாற்றி உனக்குச் சொர்க்கத்தில் இருப்பிடத்தை ஏற்படுத்தியுள்ளான் எனக் கூறப்படும். இரண்டையும் அவன் ஒரே நேரத்தில் பார்ப்பான்... பிறகு அவனுக்கு மண்ணறை விசாலமாக்கப்படும்" என்றும் இறைத்தூதர் (ஸல்)அவர்கள் கூறினார்கள்.

நயவஞ்சகனாகவோ நிராகரிப்பவனாகவோ இருந்தால், 'இந்த மனிதர் விஷயத்தில் நீ என்ன கருதிக் கொண்டிருந்தாய்?' என அவனிடம் கேட்கப்படும்போது 'எனக்கொன்றும் தெரியாது. மக்கள் சொல்லிக் கொண்டிருந்ததையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்' எனக் கூறுவான். உடனே 'நீ அறிந்திருக்கவுமில்லை: (குர்ஆனை) ஓதியதுமில்லை" என்று கூறப்படும். மேலும் இரும்பு சுத்திகளால் அவன் கடுமையாக அடிக்கப்படுவான். அப்போது அவனை அடுத்திருக்கும் மனிதர்களையும் ஜின்களையும் தவிர மற்ற அனைத்து ஜீவராசிகளும் செவியுறும் அளவுக்கு அவன் அலறுவான்."

(அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) - புகாரி)

# இறையச்சம் நிகழ்த்தும் விந்தைகள் இவை!

நபிகள் நாயகம் அவர்களுக்குப் பின் இரண்டாவது கலீபாவாக (ஜனாதிபதியாக) பொறுப்பேற்றவர் நபிகளாரின் நெருங்கிய தோழராக இருந்த உமர்(ரலி) அவர்கள்.

(ரலி- ரலியல்லாஹு அன்ஹு என்பதன் சுருக்கம். இதன் பொருள் அவர் மீது இறைவனின் திருப் பொருத்தம் உண்டாவதாக என்பதாகும்)

உமர் (ரலி) அவர்களது ஆட்சிக் காலத்தில் சிறுவர்கள், சிறுமிகள் எத்தகைய பண்பாடுகளுடன் நடந்திருக்கிறார்கள் என்பதற்கு பின்வரும் இரு சம்பவங்கள் தகுந்த சான்றுகளாக விளங்குகின்றன.

**சம்பவம் ஒன்று:**

ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் ‘ஆட்சியாளர்கள் தங்கள் பிரஜைகள் நலன் குறித்து மறுமையில் இறைவனால் விசாரிக்கப் படுவார்கள்’ என்ற நபிகளாரின் எச்சரிக்கை உமர் (ரலி) அவர்களை உறங்க விடாமல் தடுத்தது. தனது நாட்டுக் குடிமக்களின் நிலைமையை அறிந்து கொள்ளும் நோக்கில் இரவு வேளையில் மாறுவேடம் பூண்டு உலா வருவது அவரது வழக்கமாக மாறியது. ஒருநாள் இரவு அவ்வாறு உலா வரும்போது ஒரு வீட்டில் விதவைத் தாயும் மகளும் உரையாடும் சப்தம் கேட்கிறது.

தாய் சொல்கிறாள், ”எனதருமை மகளே, ஆடுகளிலிருந்து பால் கறந்து விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் வாழ்க்கைச் செலவுக்குப் போதாது. பாலில் கொஞ்சம் தண்ணீரைக் கலந்தால் என்ன?”

மகள் சொல்கிறாள், ”அவ்வாறு செய்யக் கூடாது தாயே! ஜனாதிபதி உமர் அவர்கள் பாலில் தண்ணீர் கலக்கக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கின்றார்.”

தாய் மறுமொழி சொல்கிறாள்: ”மகளே! என்ன பேசுகிறாய்? நாம் பாலில் தண்ணீர் கலப்பதை ஜனாதிபதி பார்த்துக் கொண்டா இருக்கிறார்?”

இதற்கு அந்த மகள் சொன்ன பதிலைப் பாருங்கள்:

’அன்புத் தாயே! ஜனாதிபதி உமர் அவர்கள் இங்கு இல்லாவிட்டாலும் எங்களதும் ஜனாதிபதியுடையதும் ஆன இரட்சகன் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் தாயே! நாம் எப்படி பாலில் கலப்படம் செய்ய முடியும்?’

அதிர்ந்து போனார் உமர்...

கல்வியின், அறிவின், கலாச்சாரத்தின் அறுவடை இப்படித்தான் வெளிப்பட வேண்டும்.

இன்று படிப்பு என்ற பெயரில் என்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறது? பிறரின் பையில் இருக்கின்ற பணத்தை எப்படி என்னுடைய கைக்கு கொண்டு வருவது? அதற்கு என்ன தந்திரத்தைக் கையாளலாம்? மாறாக தன்னிடமுள்ள பணத்தை வேறு யாரும் அறியா வண்ணம் தேவையுள்ள

மனிதர்களின் கையில் கொண்டு சேர்ப்பதற்கான உபாயத்தை சொல்லித் தருகின்ற மார்க்கம் இஸ்லாம்.

**சம்பவம் இரண்டு:**

உமர் (ரலி) அவர்கள் தனது குடிமக்களைக் கண்காணிப்பதற்காக மாறுவேடம் பூண்டு உலாவருகிறார்கள். ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் ஒரு இளைஞனை சந்திக்கிறார்கள். அவனுடைய இறைவிசுவாசத்தையும் ஒழுக்கப் பண்பாட்டையும் பரீட்சிக்கும் நோக்கில் அவனிடம் கேட்கிறார்கள்:

"மகனே! எனக்கோர் ஆடு வேண்டும். பணம் தருகிறேன். ஓர் ஆட்டை எனக்குத் தந்துவிடு."



அப்போது அந்த இளைஞன் சொன்னான்: "பெரியவரே! இந்த ஆட்டைத் தர முடியாது. இவை என்னுடையவையல்ல. எனது எஜமானுடைய ஆடுகள் இவை. நான் ஓர் அடிமை. எப்படி நான் உங்களுக்கு இந்த ஆட்டை விற்பது?"

அப்போது உமர் (ரலி) அவர்கள், "மகனே! உனது எஜமான் இங்கே இல்லை. அவர் உன்னைக் காணப்போவதுமில்லை. ஓர் ஆட்டை எனக்குத் தந்துவிடு, நான் உனக்கு ஒரு தொகைப் பணமும் தருகிறேன். உனது எஜமான் ஓர் ஆடு குறைகிறது, எங்கே? என்று கேட்டால் ஓநாய் ஓர் ஆட்டைப் பிடித்து விட்டது என்று சொல்" எனச் சொன்னபோது அந்த ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாமர இளைஞனின் பதில் இப்படி அமைந்தது..

"பெரியவரே! எனது எஜமான் இங்கு இல்லை. ஆனால், படைத்த அல்லாஹ் இங்கு இருக்கிறான். அவன் பார்த்துக் கொண்டிருக்கின்றானே! எனது எஜமானனுக்கு எப்படி நான் துரோகம் செய்ய முடியும்?"

இந்த பதிலைக் கேட்ட ஜனாதிபதி உமர்(ரலி) அவர்கள் கண்ணீர் விட்டு அழுகிறார்கள். அடுத்த நாள் காலை அந்த இளைஞனையும் இளைஞனின் எஜமானனையும் தனது சபைக்கு அழைக்கிறார். அந்த அடிமைக்குரிய பணத்தொகையை எஜமானனுக்குக் கொடுத்து அந்த இளைஞனை அடிமைத்தளையிலிருந்து விடுதலை செய்துவிட்டு அவ்விளைஞனைப் பார்த்துச் சொல்கிறார்:

"மகனே! இந்த உலகத்தில் உன்னை அடிமைத்தளையிலிருந்து விடுதலை செய்த இதே வார்த்தை உன்னை மறுமையில் நரகத்திலிருந்து விடுதலை செய்து சுவனத்தில் கொண்டு சேர்க்கும் என நான் நம்புகிறேன்."

இதுவல்லவா கல்வி. இதுவல்லவா அறிவு. இதுவல்லவா கலாசாரம்!

# விபச்சாரம் செய்வோருக்கு மறுமையில் என்ன தண்டனை?

**● அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு கடவுள்களைப் பிரார்த்திக்க மாட்டார்கள். அல்லாஹ் தடை செய்துள்ள எந்த உயிரையும் தக்க காரணமின்றி கொல்ல மாட்டார்கள். விபச்சாரம் செய்ய மாட்டார்கள். இதைச் செய்பவன் வேதனையைச் சந்திப்பான். (அல்குர்ஆன் 25:68)**

*அல்லாஹ் - 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது இதன் பொருளாகும்.*

*ஒழுக்கக்கேட்டை ஒருவன் செய்தால் அவன் மறுமையில் கடும் தண்டனைக்கு ஆளாகுவான் என அல்லாஹ் இவ்வசனத்தில் கூறுகிறான்.*

*ஒழுக்கக்கேடான விபச்சாரத்தைச் செய்பவனுக்குரிய தண்டனையை நபிகள் நாயகமும் நமக்கு எச்சரித்துள்ளார்கள். அவரது வாழ்நாளில் அவருக்கு மறுமையில் நரகத்தின் காட்சிகள் காட்டப்பட்டன. அதை இவ்வாறு நமக்கு விளக்குகிறார்கள்:*

*நேற்றிரவு கனவு கண்டீர்களா? என மக்களிடம் நபிகள் நாயகம் கேட்டார்கள். நபித்தோழர்கள் இல்லை என்றார்கள். அப்போது நபியவர்கள், "நான் நேற்று இரவு ஒரு கனவு கண்டேன். அதில் இரண்டு வானவர்கள் வந்து, மறுமையில் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் காட்டுவதற்காக என்னை அழைத்துச் சென்றார்கள். தீய செயல்கள் புரிந்தவர்களுக்கு அவர்களுக்குரிய தண்டனையின் பல்வேறு காட்சிகளைப் பார்த்ததை நபித்தோழர்களுக்கு விவரித்தார்கள்.*

...அங்கு அடுப்பு போன்ற ஒரு பொந்து இருந்தது. அதன் மேற்பாகம் குறுகலாகவும் அடிப்பாகம் விசாலமானதாகவும் இருந்தது. அதற்குக் கீழ் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. நெருப்பின் சூடு அதிகமாகும்போது அந்தப் பொந்தின் அடியில் உள்ளவர்கள் வெளியேற முயன்றார்கள். (ஆனால் மேற்பகுதி குறுகலாயிருப்பதால் வெளியேற முடியவில்லை.) நெருப்பு அணைந்ததும் பழைய (கீழ்ப்) பகுதிக்கு வந்துவிட்டார்கள். அதில் ஆண்களும் பெண்களும் நிர்வாணமாகக் கிடந்தார்கள். நான் 'இவர்கள் யார்?' எனக் கேட்டேன்..... 'அவர்கள் விபசாரத்தில் ஈடுபட்டவர்கள்" என்று சொல்லப்பட்டது. (ஹதீஸ் சுருக்கம்) *அறிவிப்பவர்: சமுரா பின் ஜுன்துப் (ரலி), நூல்: புகாரி 1386*

*(இதன் முழுச் செய்தியையும் புகாரி 1386வது எண்ணில் பார்க்கவும். இன்னும் பல்வேறு தீமைகளுக்குரிய தண்டனைகளும் அதில் உள்ளன.)*

*சட்டியில் தண்ணீர் கொதிக்கும் போது நுரை பொங்குவதைப் போன்று மனிதர்கள் பொங்கி வருவார்கள். பிறகு நெருப்பு அணைக்கப்பட்டதும் மீண்டும் கீழே சென்றுவிடுவார்கள். அதன் பிறகு மீண்டும் நெருப்பு மூட்டப்படும். அப்போதும் பொங்கி வெளியே வழியும் அளவுக்கு மேலே வருவார்கள். மீண்டும் நெருப்பு அணைக்கப்படும். இப்படி வெளியேற முடியாத அளவுக்கு அதில் ஒழுக்கம் கெட்டவர்கள் தனித் தண்டனையை அனுபவிப்பதாக நபிகள் நாயகம் மறுமைக் காட்சியை வர்ணிக்கிறார்கள்..*

# இறைமார்க்கத்தின் வளர்ச்சியை முறியடிக்க இயலுமா?

நீங்கள் சற்று கற்பனை செய்து பாருங்கள்... கொலை, கொள்ளை, விபச்சாரம், மது, சூதாட்டம், மூடநம்பிக்கைகள், தீண்டாமை, மனித உரிமை மீறல்கள் போன்ற கொடுமைகளை விலக்கி அங்கு தனி மனித ஒழுக்கமும் சமூக ஒழுக்கமும் பேணக்கூடிய, தீமைகளில் இருந்து விலகி வாழக்கூடிய, மனித சமத்துவம், சகோதரத்துவம் பேணக்கூடிய, பரஸ்பர அன்பு, தியாகம் கூட்டுறவு போன்ற அழகிய பண்புகள் அமைந்த சமூகம் உருவானால் இவ்வுலகமே அமைதிப் பூங்காவாகாதா? இதுதான் நம் அனைவரது ஆசையும்! ஆனால் அப்படி ஒரு சூழல் உருவாக நாம் என்ன செய்ய வேண்டும்? அதற்கு மனித மனங்களை அவர்களுக்கிடையே உள்ள இன, நிற, மொழி,நாடு போன்ற வேற்றுமைகளைக் கடந்து ஒருங்கிணைக்கும் ஒரு சித்தாந்தம் தேவைப்படுவதை நாம் உணரலாம். அதைத்தான் இஸ்லாம் நமக்கு வழங்குகிறது.

- **மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விரு வரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ..... நிச்சயமாக இறைவன் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

அதாவது ஒன்றே மனித குலம், ஒருவனே இறைவன், அவனது கண்காணிப்பின் கீழ் உள்ளோம், நம் வினைகளுக்கு மறுமையில் விசாரணையும் அதற்கேற்ப சொர்க்கமும் நரகமும் வாய்க்க உள்ளது என்ற அடிப்படை உண்மைகளை மனித மனங்களில் விதைத்து அவர்களை சீர்திருத்தி ஒழுக்கம் நிறைந்த ஓர் உலகைக் கட்டியெழுப்பவே இஸ்லாம் விழைகிறது. அதற்கான அனைத்து முயற்சிகளையும் இஸ்லாம் என்ற வாழ்வியல் கொள்கையை ஏற்றுக்கொண்டு வாழும் மக்களின் மூலம் செய்து வருகிறது.

ஐவேளைத் தொழுகையில் சம வரிசைகளில் மக்களை தோளோடு தோள் உரச நிறுத்தியும் ஒரே தட்டில் உணவைப் பகிர்ந்துண்ண வைத்தும் சக மனிதன் தனக்கு சரி சமமே மற்றும் அவன் தன் சகோதரனே என்ற உணர்வுகளை வலியுறுத்தி இஸ்லாம் நடைமுறைப்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். இதன்மூலம் கடவுளின் பெயரால் மக்களை சுரண்டும் இடைத் தரகர்கள் உண்டாக்கி வைத்திருக்கும் தீண்டாமைக் கொடுமைகளில் இருந்து கோடிக்கணக்கான மக்களை காத்து வருவதையும் அறிவீர்கள்.

இஸ்லாம் வெறும் பேச்சளவில் மனத்தளவில் சுருங்கிக் கொள்ளும் சித்தாந்தம் அல்ல. மனிதனின் வாழ்வோடு தொடர்புடைய அனைத்து துறைகளுக்கும் மிகவும் பக்குவமான வழிகாட்டுதல்களையும் நெறிமுறைகளையும் சட்டங்களையும் வழங்குகிறது. அவை இவ்வுலகைப் படைத்து பரிபாலித்துவரும் இறைவனிடம் இருந்து வந்தவை என்பதால் அவற்றில் மனித சட்டங்களில் காணப்படும் ஓட்டைகள் இருப்பதில்லை.

மேலும் இவ்வாறு அனைத்து மனிதகுலத்துக்கும் ஏற்புடைய, மனித குலத்தை இணைக்கக்கூடிய, மனித வாழ்க்கை பிரச்சினைகளுக்குத் தீர்வாக உள்ள ஒரு வாழ்வியல் கொள்கையை ஏற்பதிலிருந்து மக்களைத் தடுக்க முடியுமா? இதன் வளர்ச்சிக்கு அணைபோட முடியுமா?

**தடுக்க முயல்வது யார்?**

இன்று ஆதிக்க சக்திகளும் கடவுளின் பெயரால் மக்களை சுரண்டிப் பிழைக்கும் இடைத் தரகர்களும் இஸ்லாம் என்ற இந்த வாழ்வியல் கொள்கைக்கு எதிராக முழுமூச்சாக களம் இறங்கியுள்ளதை நாம் காண முடிகிறது. ஒருபுறம் சக்திவாய்ந்த ஊடகங்கள் மூலம் இஸ்லாமியர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படுகிறார்கள். மறுபுறம் இஸ்லாமியர்களை நாட்டுக்கு அன்னியர்கள் அல்லது வந்தேறிகள் என்று பட்டம் சூட்டி அவர்களை வெளியேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காலாகாலமாக தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்ந்தவர்களே ஆனாலும் அவர்களிடம் இந்நாட்டுப் பிரஜைகள் என்பதற்கான காகித சான்றிதழ்கள் இல்லை என்ற காரணங்கள் கூறி அவர்களை நாடுகடத்தும் நடவடிக்கைகளில் ஆதிக்க வெறிகொண்டவர்கள் இறங்கியுள்ளார்கள்.

ஒரே நாடு, ஒரே இனம் சார்ந்த அல்லது ஒரே மொழி பேசக்கூடிய மக்களில் எவராவது இஸ்லாம் என்ற கொள்கையை ஏற்றவுடன் ஏன் இவ்வாறு சக மக்களின் அல்லது ஆதிக்க சக்தியினரின் எதிர்ப்பை சந்திக்க நேரிடுகிறது?

ஆம், அதற்குக் காரணம் இருக்கிறது..

**இஸ்லாம் ஏன் எதிர்ப்புக்குள்ளாகிறது?**

● இஸ்லாம் தனிமனிதனை மட்டுமல்லாமல் முழு சமூகத்தையும் சீர்திருத்த முயல்கிறது என்பது இங்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

● ஒன்றே மனித குலம், மனிதர்கள் அனைவரும் சரி சமமே ஒருவருக்கொருவர் சகோதரர்களே என்பதை இஸ்லாம் அடிப்படையாக போதிப்பதோடு அதை நடைமுறைப்படுத்தவும் செய்கிறது. அதனால் இனத்தின், நிறத்தின், குலத்தின், ஜாதியின் மேன்மைகளைக் கூறி மற்ற மக்களை அடிமைகளாக பாவித்து ஆதிக்கம் செய்து வாழ்வோர் இக்கொள்கையை முழுமூச்சாக எதிர்க்கிறார்கள்.

● படைத்தவன் மட்டுமே இறைவன், அவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன், அவனை நேரடியாக பொருட்செலவின்றி அணுக முடியும் என்று இஸ்லாம் கூறுகிறது. அதை நடைமுறைப் படுத்தியும் காட்டுகிறது. இந்த செயல் கடவுளின் பெயரால் மக்களை சுரண்டும் இடைத்தரகர்களை அமைதி இழக்கச் செய்கிறது! மூடநம்பிக்கைகளை பாமர மக்களுக்கு இடையே பரப்பி அவற்றைக் கொண்டு காலாகாலமாக மக்களைச் சுரண்டி வாழ்பவர்களுக்கு இக்கொள்கை பரவுவது அறவே பிடிக்காது!

● இஸ்லாம் வட்டி, விபச்சாரம், சூதாட்டம் இவற்றுக்கு தெளிவான தடை விதித்து இக்கொள்கையை ஏற்றுக்கொண்ட மக்களை இத்தீமைகளில் இருந்து காப்பாற்றுகிறது. அதனால் இத்தீமைகளை வைத்துக்கொண்டு

வயிறு வளர்ப்பவர்களுக்கும் மக்களை சுரண்டுபவர்களும் இஸ்லாம் பரவுவதை முழுமூச்சாக எதிர்க்கிறார்கள்

● தன்னைச் சுற்றி நன்மையை ஏவுவதையும் தீமைகளைத் தடுப்பதையும் இறைவிசுவாசிகளின் மீது கடமை என்கிறது இஸ்லாம். அதன் காரணமாக மக்கள் விழிப்புணர்வு பெற்று நாட்டை சுரண்டும் ஆதிக்க சக்திகளுக்கும் அவர்களின் கைப்பாவை ஆட்சியாளர்களுக்கும் எதிராகத் திரும்புகிறார்கள். அவர்களிடமிருந்து தங்கள் நாடுகளை விடுவிக்கவும் தங்கள் நாட்டுவளங்கள் கொள்ளை போவதைத் தடுக்கவும் போராடுகிறார்கள்.

இவற்றின் காரணமாக ஆதிக்க சக்திகள் தங்கள் சக்தி வாய்ந்த ஊடகங்கள் மூலம் இஸ்லாத்திற்கு எதிராக பெரும் பரப்புரைகள் மேற்கொள்கிறார்கள். தங்கள் கைக்கூலிகளைக் கொண்டு இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்கும்படியான நிகழ்வுகளை நடத்தி இஸ்லாத்தின் மீது அவப்பெயர் ஏற்படுத்துகிறார்கள். இஸ்லாம் வெகுவேகமாகப் பரவி வருவதைத் தடுக்க மக்களை தங்கள் ஊடகங்கள் மூலமாக மக்களை மூளைச்சலவை செய்யத் துடிக்கிறார்கள்.

### இறுதியில் இஸ்லாமே வெல்லும்

உண்மையில் இஸ்லாத்திற்கு எதிராக களம் இறங்கியுள்ளவர்கள், இது அவர்களைப் படைத்த இறைவன் தந்துள்ள வாழ்வியல் கொள்கை என்பதையும் அவர்கள் உட்பட அனைவரையும் வாழவைக்க வந்தது என்பதையும் அந்த இறைவனிடமே இறுதி மீளுதலும் விசாரணையும் உள்ளது என்பதையும் அறிந்திருந்தால் அவர்கள் போக்கு நேர் எதிர்திசையில் திரும்பும். அவர்களும் தங்களை இந்த இயக்கத்தில் இணைத்துக்கொண்டு உலகில் அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவார்கள். அவர்கள் திருந்தினாலும் சரி, திருந்தாவிட்டாலும் சரி இறுதியாக இஸ்லாமே வெற்றிபெறும் என்பதை இறைவன் தெளிவாக அறிவிக்கிறான்:

● **“தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்துவிட அவர்கள் விரும்புகின்றார்கள் - ஆனால் சத்திய மறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவன் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.“ (திருக்குர்ஆன் 9:32)**

இன்று இங்கு வாழும் இஸ்லாமியர்களை முழுமையாக வெளியேற்றினாலும் சரி, கொன்று குவித்தாலும் சரி, அவ்வாறு எஞ்சியவர்களிடையேயும் இஸ்லாம் வளரும் என்பதையும் ஏன், அவர்களே கூட இறைவனின் நாட்டமிருந்தால் இந்நேர்வழியைப் பெற்று திருந்தவும் கூடும் என்பதையும் மேற்படி இறைவசனம் கூறுகிறதல்லவா?

## இஸ்லாத்தை ஏற்றவருக்கான பிரார்த்தனை

ஒருவர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினால், அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகையைக் கற்றுக்கொடுப்பார்கள். பிறகு ’அல்லாஹும்மஃக்பிர் லீ வர்ஹம்னீ வஹ்தினீ வ ஆஃபினீ வர்ஸுக்னீ’ எனும் இந்த வாக்கியங்களைச் சொல்லிப் பிரார்த்திக்கும்படி கட்டளையிடுவார்கள். (பொருள்: இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்குக் கருணை புரிவாயாக! என்னை நல்வழியில் செலுத்துவாயாக! எனக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! எனக்கு வாழ்வாதாரத்தை வழங்குவாயாக!) (நூல்: முஸ்லிம்)

# நாட்டுப்பற்று - நாடு - தேசத்துரோகம்

மக்கள் தங்கள் வாழும் நாட்டின் மீது கொள்ளும் பற்றானது இனம் மொழி மதம் அல்லது கொள்கை போன்றவற்றின் மீது உள்ள பற்றினாலும் தாக்கத்தினாலும் மாற்றங்களுக்கு உள்ளாகிறது என்பதே உண்மை. மட்டுமல்ல, பொருளாதாரம் வாழ்க்கை வசதிகள், வறுமை, செழிப்பு, உறவு, போன்ற காரணிகளும் நாட்டுப் பற்றின் மீது நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

## நாடு என்ற கருத்தும் அதன் நிலையில்லாமையும்

'நாடு' என்ற கருத்தும் ஆளுக்கு ஆள் சூழலுக்கு சூழல் மாறுபடக் கூடிய ஒன்றே. நாடு என்பது எப்படி உருவாகி இருந்தாலும் அது முக்கியமாக அதை ஆள்பவர்களுக்கு பயன் கொடுத்துக்கொண்டு இருக்கக்கூடியது. அதன் குடிமக்களைப் பொறுத்த வரை அந்த நாட்டோடு இருக்கக்கூடிய பற்று என்பது அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் அனுகூலங்களைப் பொறுத்தது. நாட்டுப்பற்றின் கூடுதல் அல்லது குறைவு என்பது பல காரணிகளைப் பொறுத்து அமைகிறது. உதாரணமாக பாலைவனத்தில் பிறந்த ஒரு மனிதன் வறுமை பாதிக்கும்போது தான் பிறந்த பூமி என்றும் நாட்டுப்பற்று என்றும் கூறிக்கொண்டு வாழ்வாதாரம் தேடி அண்டை நாடுகளில் அடைக்கலம் தேடாமலோ அல்லது குடிபெயராமலோ இருப்பதில்லை. அது போலவே பயம், ஆபத்து அல்லது வறுமை போன்றவை பாதிக்கும்போதும் மனிதன் தன் பிறந்த நாட்டை அல்லது வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாட்டைத் துறக்கவே செய்கிறான்!

## ஆதிக்க சக்திகளின் இரட்டை நிலை

ஆனால் இன்று ஆதிக்க சக்திகள் தங்கள் அடக்குமுறையால் நலிந்தோர்களை அடக்கியாளும்போது அதனால் பாதிக்கப்பட்டு அவர்களிடம் இருந்து தப்பிக்க வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தால் உடனே அவர்களை மிக எளிதாக தேசத்துரோகிகள் என்று முத்திரைகுத்தி விடுகிறார்கள். ஊடகங்கள் மூலம் அவர்களை பெரும் குற்றவாளிகளாக சித்திரிக்கவும் செய்கிறார்கள். அதேவேளையில் அந்த ஆதிக்க சக்தியாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தங்கள் சொந்த விஷயம் என்று வரும்போது வாழ்க்கை வசதிகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் தேடி தங்கள் குழந்தைகளை நாட்டுப்பற்றைக் காரணம் காட்டி வெளிநாடுகளுக்கு அனுப்பாமல் இருப்பதில்லை. தாய்நாட்டில் சம்பாதித்த செல்வங்களை வெளிநாடுகளில் முதலீடு செய்யவும் அங்கு வங்கிகளில் சேமிக்கவும் இவர்கள் தவறுவதும் இல்லை. இது இவர்களின் இரட்டை நிலை! ஆக, இன்று 'நாட்டுப்பற்று' அல்லது 'தேசத்துரோகம்' போன்ற பதங்கள் சந்தர்பங்களுக்கு ஏற்றவாறு அரசியல் நடத்த கையாளப் படுவதைக் காணலாம்.

## உண்மையில் நாட்டுப் பற்று என்பது என்ன?

பொதுமக்கள் காணும்படியாக நிலத்தை முத்தமிடுவதும், சில கவிஞர்கள் இயற்றிய பாடல்களை உருவிடுவதும், தேசத்தின் கொடியை பலர் காண

வணங்குவதும் எல்லாம் நாட்டுப்பற்றாக சித்தரிக்கப் படுகிறது. இவற்றில் எந்த அளவுக்கு ஆத்மார்த்தம் உள்ளது என்பதையும் இவற்றில் பெரும்பாலானவை புறக்கவர்ச்சிக்காக செய்யப்படுபவையே என்பதையும் நாம் அறிந்தே இருக்கிறோம்.

உண்மை நாட்டுப்பற்று என்பது நாட்டின் வரைபடத்தையோ பூகோள அமைப்பையோ நேசிப்பதைவிட அந்நாட்டைச் சேர்ந்த மக்களை நேசிப்பதுதான். நாட்டு மக்களின் நலன் கருதி அவர்களுக்கு தன்னால் முடிந்த சேவைகளை ஆத்மார்த்தமாக செய்வதும் அவர்களோடு இணக்கமாக வாழ்வதும் அவர்களுக்காக உழைப்பதும்தான் உண்மையான தேசப்பற்று. நாட்டில் ஆரோக்கியம் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றின் வளர்ச்சிக்கு தன்னலம் கருதாது உழைப்பதும் அவர்களை ஒரு பண்பாடு மிக்க குடிமக்களாக வார்த்தெடுக்க தன்னால் ஆன ஒத்தாசைகளை செய்வதும் நாட்டுப் பற்றின் உண்மை அடையாளங்களாகும்.

நாடு ஆபத்துக்கோ வறுமைக்கோ பஞ்சத்துக்கோ அநியாயத்துக்கோ உள்ளாகும்போது உயிரை துச்சமாகக் கருதி நாட்டை விட்டு ஓடாமல் அங்கேயே நிலைத்து நின்று நாட்டின் இடுக்கண்ணை விடுவிக்கப் பாடுபடுவது என்பது உண்மை நாட்டுப்பற்றின் உச்சகட்டம் எனலாம்!

இப்படிப்பட்ட ஆத்மார்த்தமான நாட்டுப்பற்று மனித உள்ளத்தில் வரவேண்டுமானால் அங்கு இறைநம்பிக்கையும் இறையச்சமும் அடிப்படைத் தேவைகளாகும்.

நம்மைப் படைத்த இறைவன் நமக்கு கற்றுத்தரும் வாழ்க்கைத் திட்டத்திற்கே அரபி மொழியில் இஸ்லாம் என்று வழங்கப் படுகிறது. அதை வாழ்க்கை நெறியாக ஏற்றவர்கள் அவர்கள் வாழும் நாட்டை அதாவது நாட்டு மக்களை நேசிக்காமல் இருக்கமுடியாது. இன, மொழி, நிற, மத வேற்றுமைகளை மறந்து மனிதகுலம் அனைத்தையும் தங்கள் சகோதரர்களாக பாவிக்கவேண்டும் என்பது இங்கு இறைவன் கற்பிக்கும் அடிப்படைப் பாடமாகும்.

மேலும் நாட்டு மக்களை நேசிப்பதை வழிபாடாகக் கற்பிக்கிறது இஸ்லாம்.

“மண்ணிலுள்ள மனிதர்களை நேசித்தால் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பான்” என்பது நபிமொழி.

இஸ்லாம் முன்வைக்கும் மறுமை நம்பிக்கை - அதாவது இறைவனின் கட்டளைகளை பூமியில் நடப்பாக்க செய்யப்படும் எந்த ஒரு செயலும் வீண்போவதில்லை. அவற்றிற்கு இறைவனிடம் மறுமையில் அதாவது சொர்க்க வாழ்வில் நற்கூலி உண்டு என்ற உறுதியான நம்பிக்கை - இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்பவர்களுக்கு அலாதியான துணிச்சலையும் வீரத்தையும் தருகிறது. நாட்டு மக்களை அநியாயத்தில் இருந்தும் அக்கிரமங்களில் இருந்தும் அந்நியர்களின் தாக்குதல்களில் இருந்தும் பாதுகாக்க சொந்த உயிரையும் உடமைகளையும் அர்பணிக்க மாபெரும் உந்துசக்தியாக இந்த நம்பிக்கை செயல்படுகிறது. இதை மிஞ்சும் நாட்டுப்பற்றை எங்கேனும் காணமுடியுமா?

# கெட்ட வார்த்தைகளுக்குத் தடை

● அநியாயத்திற்கு உள்ளானவர்களைத் தவிர வேறு யாரும் (யாரைப் பற்றியும்) பகிரங்கமாக (கூச்சலிட்டு)த் தீய வார்த்தைக் கூறுவதை இறைவன் விரும்பவே மாட்டான். இறைவன் செவியுறுபவனும் நன்கறிபவனுமாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 4:148)

● (நபியே!) என்னுடைய அடியார்களுக்கு நீர் கூறும்: அவர்கள் (எந்த மனிதரிடம் பேசியபோதிலும்) எது மிக அழகியதோ அதையே சொல்லட்டும். நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கு மத்தியில் (கெட்ட வார்த்தைகளைக் கூறும்படி செய்து) கெடுதலே செய்வான். (ஏனென்றால்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான எதிரியாக இருக்கிறான். (அல்குர்ஆன் 17:53)

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எஃப்: 9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

..................................................................................

..................................................................................

..................................................................................

..................................................................................

❖ "(இப்பூமியில்) விதைப்பதை நீங்கள் கவனித்தீர்களா? அதனை நீங்கள் முளைக்கச் செய்கின்றீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கின்றோமா? நாம் நாடினால் திட்டமாக அதனைக் கூளமாய் ஆக்கிவிடுவோம் - அப்பால் நீங்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருப்பீர்கள்." (திருக்குர்ஆன் 56:63-67)

